2004 நவம்பர் 18]

இந்த ஆட்சியிலே, ஆதிதிராவிட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்தத் துறையின் மூலமாக ஏன் இதுவரையிலே ஒரு கல்லூரி தொடங்கப்படவில்லை? தொடங்குவதற்கான உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். இந்த நந்தனார் அறக்கட்டளை — புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அன்றைக்கு எங்களுடைய கோரிக்கையை ஏற்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த அறக்கட்டளையை அன்றைக்குக் கலைத்தார்கள். கலைத்த பின்னாலே, அந்த அறக்கட்டளைக்கு இதுவரையிலே ஒரு பராமரிப்புக் குழு என்று ஒரு குழு இல்லை. 80 ஆண்டுகளுக்கு முன்னாலே 25 ஏக்கர் நிலப்பரப்பிலே தொடங்கப்பட்ட அந்தப் பள்ளி நிறுவனம், சுவாமி சகஜானந்தா அவர்கள் எப்படித் தொடங்கினாரோ, அதே நிலைமையிலேயே அது இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு பராமரிப்புக் குழுவை இன்றைக்கு நம்முடைய ஆதிதிராவிட நலத் துறை உருவாக்குமா? அதிலே அனுபவம் பெற்றவர்கள், ஆதிதிராவிட மக்களின் நலனிலே அக்கறை உள்ளவர்கள் இடம் பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசு உருவாக்குமா என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நந்தனார் மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக அது இயங்குகின்ற இந்த இனிய வேளையில், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்புதான், அந்தக் கட்டடங்களைப் பழுதுபார்க்கின்ற பணிகள் எல்லாம், மிகவும் தரமாகப் பழுதுபார்க்க வேண்டுமென்று, அதற்காக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகளைப் பழுதுபார்ப்பதற்கு 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அது பழுதுபார்க்கப்பட்டுள்ளது. அதேபோல, அந்தப் பள்ளியினுடைய சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது, முறையாக அது நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

[2004 நவம்பர் 18

36—

மாணவியர் விடுதி

*** 49083—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு விடுதி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் 10 மேல்நிலைப் பள்ளிகள், 19 உயர்நிலைப் பள்ளிகள், 3 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் ஆதிதிராவிட மாணவியர்களுக்கென்று தனி விடுதி எதுவும் இல்லாத காரணத்தினால், கூலி விவசாயிகளுடைய பிள்ளைகள், பீடித் தொழிலாளர்களுடைய பிள்ளைகள், வசதி இல்லாத பிள்ளைகள் எல்லாம் படிப்பதற்குச் சிரமப்படுகின்றார்கள். இந்தக் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலாவது ஒரு விடுதி கட்ட ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதிக்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டாண்டுகளாக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு கட்டடம் கட்டாமல் தாமதித்து வருகின்றார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இந்த நிதி ஆண்டில் கட்டித் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

2004 நவம்பர் 18]

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த ஆதிதிராவிடர் நலத் துறையின் 574 விடுதிகளுக்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அரசால் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். நடப்பு ஆண்டோடு 574 விடுதிகளுக்கும் அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட உள்ளன. இத்துறையின் ஆதிதிராவிட மாணவர் மாணவியர்கள் விடுதிகள் 1,076; பழங்குடியினர் மாணவ மாணவியர்கள் விடுதிகள் 26; ஆக மொத்தம் 1,102 விடுதிகளையும் அரசு சொந்தக் கட்டடங்களாக மாற்றிய பெருமை இந்தியாவிலேயே தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இதுபோன்ற சாதனை கிடையாது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை சுமார் 1.30 இலட்சம் ஆகும். இவர்களுக்கு உணவுக் கட்டணமாக ஆண்டுக்கு சுமார் 40 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்குச் சிறப்பான திட்டங்களின்மூலம் கோடிகோடியாக ரூபாய் ஒதுக்கீடு செய்து கொடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கந்திலியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு இட ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் இரண்டு வருடங்களாக தாமதம் ஆகி வருகின்றது. உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த நிதியாண்டில் அதை கட்டித் தருவார்களா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.